ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருக்கச்சி நம்பிகள்



திருக்கச்சி நம்பிகள்

## தனியன்

தேவராஜ தயாபாத்ரம் ஸ்ரீகாஞ்சி பூர்ணம் உத்தமம்

ராமாநுஜ முநேர் மாந்யம் வந்தேஹம் ஸஜ்ஜநாச்ரயம்

எம்பெருமானின் எண்ணற்ற கல்யாண குணங்களை, ஆழ்வார்கள் தாம் அருளிய திவ்ய பிரபந்தத்தில் அருளிச் செய்துள்ளனர். எண்ணற்ற கல்யாண குணங்களில் ஒன்றான சௌலப்யத்தினால் எம்பெருமான் தனது அர்ச்சாவதாரத்தில் பரத்வத்தை குறைத்துக் கொண்டு உரையாடிய ஒரு சில அடியவர்களில் ஒருவர் கஜேந்திரதாஸர் என அழைக்கப் படும் திருக்கச்சி நம்பிகள். பராசரபட்டர் எம்பெருமானின் இந்த சௌலப்ய குணத்தை

*அர்ச்சக பராதீன! அகிலாத்ம ஸ்திதி: என்று குறிப்பிடுகிறார்.*

*காஞ்சி பூர்ணர் என்று அழைக்கப்படும் திருக்கச்சி நம்பிகள், ஆளவந்தாரின் பிரதான சீடர் ஆவார். காஞ்சி தேவப் பெருமானுக்கு திருவாலவட்டக் கைங்கர்யம் செய்து வந்தார்.*

*மணவாளமாமுனிகள் தேவராஜ மங்களத்தில்*

*" ஸ்ரீ காஞ்சி பூர்ண மிஸ்ரேண ப்ரீத்யா ஸர்வாபிபாஷிணே!*

*அதீதார்சாவ்ய வஸ்தாய ஹஸ்த்ய த்ரீஸாய மங்களம் !!*

*என்று அருளுகிறார்.*

*திருக்கச்சி நம்பிகள் பூவிருந்தவல்லியில் மாசி மாதம் ம்ருகசீரிஷ நட்சத்திரத்தில் திருவவதரித்தார். திருவாலவட்ட கைங்கர்யம் செய்து கொண்டிருக்கும் போதே நேரடியாக தேவப்பெருமாள் மற்றும் பெருந்தேவி தாயாருடன் உரையாட வல்லவர்.*

*வாரணாசி யாத்திரையின் போது தன்னைக் கொல்ல நடந்த சதியிலிருந்து தப்பித்தப் பின் காஞ்சி திரும்பிய இளையாழ்வார்( ராமாநுஜர்) தன் தாயாரின் அறிவுரைப்படி, ஆளவந்தாரின் சீடரும், காஞ்சி தேவப் பெருமானின் அந்தரங்க கைங்கர்யப் பரரான திருக்கச்சி நம்பிகளை ஆஸ்ரயித்து, நம்பியின் கட்டளைப்படி சாலைக் கிணற்றிலிருந்து தினமும் தீர்த்த கைங்கர்யம் செய்து வந்தார். தீர்த்த கைங்கர்யம் செய்து கொண்டிருந்தாலும் இளையாழ்வாரின் திருவுள்ளத்தில் அமைதியில்லை. சரியான ஆச்சார்யனை ஆஸ்ரயிக்காமல் பெருமானை ஆஸ்ரயித்து பயனென்ன என்பதை உணர்ந்தார். நாட்கள் செல்ல செல்ல திருக்கச்சி நம்பிகளிடத்தில் தமது அன்பும் பக்தியும் வளர்ந்து வருவதை உணர்ந்தபின், நம்பியையே ஆசார்யராக வரித்து, அவரை அணுகி சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு, இந்த ஆத்மாவை தேவரீர் தான் உஜ்ஜீவிக்கச் செய்ய வேணும் என்று விண்ணப்பித்து கைக்கூப்பி நின்றார். ஆனால் நம்பி, இளையாழ்வாரின் வேண்டுகோளுக்கு ஒப்பவில்லை. வர்ணாச்ரம தர்மம், நமது இருவர் பிறப்பு அதற்கு இடம் கொடாது என்று பதில் கூறினார்.*

*திருக்கச்சி நம்பியை தமது குருவாக வரிக்க முயன்று, அதற்கு நம்பி தமது கீழ்க்குல பிறப்பை நினைத்து இசையாதபடியாலே, அவர் அமுது செய்த சேஷத்தை உண்டு, அதன் மூலம் ஆத்மிக முறையில் குரு- சிஷ்ய பாவத்தை ஏற்படுத்திக் கொள்ள முயன்று, திருக்கச்சி நம்பியின் சாமர்த்தியத்தாலும், தமது தர்ம்பத்தினியின் ஆசார மமதையாலும் அதிலும் தோல்வி அடைந்த இளையாழ்வார், சகல சராசரங்களுக்கும் மூலப் பொருளான பகவானிடமே தமது அபிலாஷைகளுக்கு முடிவு காண வேண்டி, நம்பியை அணுகி ( தேவப் பெருமாளிடம் உரையாட வல்லவர் என்பதால்) தனது*

திருவுள்ளத்தில் உள்ளவைப் பற்றி பெருமானைக் கேட்கும்படி வேண்ட, நம்பியும் அதற்கு இசைந்தார்.

அன்றிரவு வரதராஜப் பெருமாளுடன் ஏகாந்தத்தில் இருக்கையில், தேவப்பெருமாள் அனைத்தும் அறிந்தவர் ஆகையால் நம்பிகள் நோக்கி, நீர் ஏதாவது கூற விரும்புகிறீரா? என வினவ, நம்பிகளும் பெருமானிடம் இளையாழ்வாரின் திருவுள்ள கருத்துகளை விண்ணப்பித்துக் கொண்டார்.உடனே தேவப்பெருமாள், நான் கலைகளை கற்பதற்காக சாந்தீபினி ஆஸ்ரமத்திற்கு சென்றதைப் போல, அனைத்து சாஸ்திரங்களிலும் வல்லவரான இளையாழ்வாரும் தன்னுடைய சந்தேங்களுக்கான விடைகளை என்னிடம் கேட்கிறார் என்று கூறி விட்டு, இளையாழ்வார் உம்மிடம் கேள்விகளை சொல்லவில்லை. ஆகவே நாமும் பதில்களை மாத்திரமே சொல்கிறோம், அவரிடம் தெரிவித்து விடும் என்று கூறி , பெருமான் ஆறு வார்த்தைகளை திருவாய் மலர்ந்தருளினார்.

தேவப்பெருமாள் அருளிய ஆறு வார்த்தைகள்

1. பரத்வம் நாமே
2. பேதமே தர்சனம்
3. உபாயமும் ப்ரபத்தியே
4. அந்திம ஸ்ம்ருதியும் வேண்டா
5. சரீர அவஸானத்திலே மோக்ஷம்
6. பெரிய நம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பது.

திருக்கச்சி நம்பியும் தேவப்பெருமாள் திருவாய் மலர்ந்தருளிய ஆறு வார்த்தைகளை இளையாழ்வாரிடம் தெரிவித்தார். இளையாழ்வாரும் நம்பியின் பேருதவிக்காக தமது க்ருதக்ஞைகளை தெரிவித்தார்.

வ்யாக்யானங்களில் சில குறிப்புகள்

1. ஒரு வாரணம் பணிகொண்டவன் பொய்கையில் என்று ஸ்ரீ கஜேந்திராழ்வானுக்கு எம்பெருமான் அருள் புரிந்தமையை பெரியாழ்வார் கூறுகையில் , எம்பெருமானுக்கு, கஜேந்திரன் மிகவும் உகந்தவன் என்பதற்கு உதாஹரணம்

பேரருளாளனுக்கு திருவாலவட்ட கைங்கர்யம் செய்து வந்த திருக்கச்சி நம்பிகள், தேவப்பெருமானிடம், தேவரீர்க்கு மிகவும் விருப்பமான பெயர் ஒன்றை தனக்கு இட வேண்டும் என்று வேண்டிக் கொண்ட போது, உடனே தேவப் பெருமாள் ,உம்மை நாம் கஜேந்திர தாஸன் என்று அழைக்கக் கடவோம் என்றருளிச் செய்தார்.

2. எம்பெருமானாருடைய ஆசார்யர்களும், சீடர்களும் குழுமியிருந்தபோது, ஒரு நாள் எம்பெருமானார், காஞ்சிபுரத்திற்கு சென்று, திருக்கச்சி நம்பிகள் எப்படி எழுந்தருளியிருக்கிறார் என்று விசாரித்துக் கொண்டு வருவார் யாரேனும் உண்டோ? என்று கேட்க, கோஷ்டியில் ஒருவரும் முன் வரவில்லை. மறுநாள் பெரிய நம்பி, எம்பெருமானாரை அணுகி, அடியேன் பெருமாள் கோயிலுக்குச் சென்று, பெருமாளை சேவித்து விட்டு வரலாம் என்று இருக்கிறேன் என்று கூற, எம்பெருமானாரும் , அடியேனுடைய ஆசார்யரான தேவரீரை , அடியேன் தடை செய்ய முடியுமோ? எழுந்தருளலாமே என்றார். பெரிய நம்பியும் காஞ்சிபுரத்திற்கு சென்று திருக்கச்சி நம்பியின் நலத்தை அறிந்து கொண்டார். காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்ட போது, இன்னும் சில நாட்களில் உத்ஸவ

திருநாள் தொடங்கப் போவதால், சேவித்து விட்டு போகலாமே என்று கூற, அதற்கு பெரிய நம்பி அடியேன் எம்பெருமானாரின் திருவுள்ளத்தை நிறைவேற்றுவதற்காக இங்கே வந்தேன். வந்த காரியம் முடிந்துவிட்டது.எனவே உடனே போக வேண்டும் என்றார்.

3. காஞ்சி தேவப்பெருமானுடன் நேரில் பேசும் பாக்கியம் பெற்றதால், தனக்கு வைகுந்த ப்ராப்தி கிடைக்குமா என்று கேட்க, அதற்கு தேவப்பெருமாள் , நம்பி, நீர் வீசியதற்கு நான் பேசியது சரியாகி விட்டது.ஆசார்ய திருவடி சம்பந்தம் இல்லாமல் மோட்சம் இல்லை என்று கூற, நம்பியும் ஆசார்ய சம்பந்தம் பெற்று, திருநாடு அலங்கரித்தார்.
4. திருக்கச்சி நம்பிகள் காஞ்சி வரதனுக்காக தேவராஜாஷ்டகம் அருளினார்.